**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 45-வது பட்டமளிப்பு விழா

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 45-வது பட்டமளிப்பு விழா, மார்ச் 25, 2025 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு, மேதகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தலைமையேற்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சரும், இப்பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் அறநல்கை பரிசுகளை அறிவிக்கவுள்ளார்.

அவ்வமயம், திரு. இரா.செல்வம், இ.ஆ.ப., நிர்வாக இயக்குனர், தோல் ஏற்றுமதிக் கழகம், சென்னை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றவுள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 4,434 மாணவர்கள் இளமறிவியல், முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் முனைவர் பிரிவில் பட்டம் பெற உள்ளனர். இதில் உறுப்பு கல்லூரிகளிலிருந்து 1,536 மாணவர்கள் நேரடியாகவும் (In person), உறுப்பு மற்றும் இணைப்பு கல்லூரிகளில் இருந்து 2,898 மாணவர்கள் தபால் (In absentia) மூலமாகவும் பட்டங்களைப் பெற உள்ளார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**